ஆதி மார்க்க னீதி மொழி

October 2026

Copyright © AMNA Trust, Chennai



மூலமந்நிரம்

முத்திபூர்ணம்!

மெய்யாக மெய்யாகவே சதுர்யுகங்ஙோடி கால மக்களிடத்திலும் உள்ள சர்வ மூலமந்நிர னிரூபிக மகான்மியராகிய யுகவான் சாலை ஆண்டவர்களே முத்தி பாலிப்பு.

பாத பூஜை

சுயம் பிரகாச னித்தியானந்ந பிரம்ம சொரூபத்தினை அறியாது அஞ்ஞானமென்னும் திமிரத்தால் குருடாயிருந்த எங்களுடைய கண்களை ஞானமென்னும் அஞ்ஞன சலாகையால் திறந்ந தேசிகேந்நிரரே தேவரீருடைய திவ்ய திருவடிக் கமலங்ஙளுக்கே னமஸ்காரம்.

மகாசங்ஙல்ப மந்நிரம்

மறலி என்கிற எமனுடைய அவமான அவஸ்தை வந்து தீண்டும் அடையாளம், கசப்பு தீட்டு பிணனாற்ற ஜலம் வெளியாகி யுகங் ஙோடிகால னரக வேதனைக்குப் போகாமல் அதைமாற்றி, பரமபத னித்திய மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றவே சதுர்யுகத்திலும் உண்டான எல்லா ஜாதி மத வேதங்களும் வந்நிருக்க அந்த அகமிய மகா அதிவல்லப தெய்வீக பிரம்மவித்தைச் செயலானது மானெடுங்ஙாலங்ஙளாக மக்கள் புழக்கத்தில் இல்லாது இந்த உலகத்தை விட்டு மறந்து மறைந்நே போய்விட்ட இறுதிக்காலமாகிய இதுனேரம் எமபயத்தைக் கடத்தி மீண்டும் அதே பிரம்மவித்தைச் செயலாகிய சுவர்கப்பதி பரமபத முத்திச் செயலினில் ஏற்றி வைக்கும் கல்கி மகதி என்னும் மூக்குக்கு வெளியே மூச்சு ஓடாத தவமுடைய ஊண் உறக்கமற்ற எங்ஙள் குலதெய்வம் மெய்வழிச்சாலை ஆண்டவர்கள் மெய்மதத்தில் னாங்ஙள் சேர்ந்து ஆகிக்கொண்டிருக்கின்றோம்!

எதார்த்த னன்மனத்தினர் யாராக இருந்தாலும் இதில் சேர்ந்து தேவப்பிறப்பிலே பிறந்து ஆகிக்கொள்வதற்கு ஆண்டவர்களுடைய ஆசீர்பாதம்!

Copyright © AMNA Trust, Chennai

குருபிரான் அவர்களின் முன்னுரை



ஆதி மார்க்க னீதி அவையின் அங்கங்களே! எதார்த்த நன்மன சற்சன மக்களே !

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் அருளுடனும் ஆசியுடனும் ஆதி மார்க்க னீதி அவையின் ஆதி மார்க்க னீதி மொழி மின்னணு சஞ்ஞிகை செப்டம்பர் மாதத்தின் நிகழ்வான, 11 அவை மற்றும் 3 இசை வகுப்புடன், 63ஆம் முறையாக இதழ் விரித்து வாடாத மெய்ம்மணம் கமழும் மலராக மலர்ந்துள்ளது.

இதில் சொல்லப் பெற்றுள்ள செய்திகள் யாவும் மெய்ம்மை என்பது இன்னதுதான் என மக்கள் உணர்வதற்காக எடுத்து கையாளப் பெற்ற 18 கான்வாதாக்களில் ஒன்றாகும். மெய்மையை அறிய வேண்டுமெனில் முதலில் பொய்மையை நாம் அறிய வேண்டும். பொய்மையின் மூலமாகத்தான் மெய்மையை அறிய முடியும்.

பொய்மையிச் சாலமென்னும் புலையர்மெய் யறிவதெங்கே
மெய்மைய றிவதற்கு விட்டகுறை வேண்டும்விதி
உண்மையு ரைக்கவென்றா லும்முல்கு ரானன்மை என்றும்

அண்டரு லகத்துமை யறியார்க ளிருதயத்துள்
சண்டாளர் பொய்ம்மைசெய்து சாவார்ஜ ஹன்னத்துள்ளே

என்றும் தங்களது தெளஹீது காமீல் பாடலில் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அசலை நினைவூட்ட எடுத்து வைக்கப் பெற்ற நகலையே அசலாக நினைத்து, தான் உணர்ந்து கொண்டது பொய் எனக் கூட உணராத அளவில் இருப்பவர்களையே சண்டாளர் என்றும் அவர்கள் ஜகன்னம் எனும் நரகத்தில் சாவார்கள் எனவும் சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள். அப்படியான நரகிலிருந்து மீள்வதற்கான வழியாக, இப்புவியோர் ஓதுமறை யுபனிடதம் இதிகாச மெல்லா மோர்ந்தும் தப்பிதமாம் ஒப்பனைகள் பல கோடி தனிற்புகுந்து தயங்க லெல்லாம் ஒப்பரிய மதிக்கிரண மலையேறி ஓர் நிலையில் ஊன்றிப் பார்க்க செப்பரிய மேம்பாடாம் மெய் வழியைச் சேர்ந்திடுவீர் ஜெகத்தினோரே எனப் பெருங்கருணை கொண்டு, ஒப்பனையாக வேஷம் போட்டு தெரியக் கூடிய ஒரு விஷயத்தை நிஜம் என நம்புவோரின் நிலை இதுதான் என எச்சரித்துத் தூண்டும் படியாகத் தங்களின் மக்களுக்காக காஷாயப் பத்திரத்தில் அருளியுள்ளார்கள்.

அதுபோல் இன்று அத்தனை ரகசியங்களும் உள்ளடக்கிப் பேசப்பெற்ற இம் மெய்ஞானத்தை மெய்யாகவே அறிந்து உணர்ந்த மக்கள் தங்களின் அவை நிகழ்வின் மூலமாக மக்களுக்குத் தெரிவிக்க கூடிய ரகசியங்கள் யாவற்றையும் ஓங்கி உரத்த குரலில் அறிக்கை செய்ததை மெய்ம்மணம் கமழப் பிரதி மாதமும் ஓய்விலாப் புனல்

Copyright © AMNA Trust, Chennai

ஊறும் தடாகமாக நன் மக்களுக்கு விடிவாக வந்து விழிப்பைத் தரும் ஒரே நோக்கமுடன் ஓய்விலாச் சூரியனாக வருவதே இம் மின்னணுச் சஞ்சிகை.

கேட்டுத் திருந்தி உடனெழும் தரத்தில் ஒருவரேனும் தேறிலர் என வள்ளல்பிரான் மிகுந்த வேதனையுடன் கூறியதை நன்கு உணர்ந்ததன் காரணத்தால், வருங்கால மக்களும் இதனைப் பார்த்துப் படித்துப் பயன் பெற வேண்டும் என்ற ஒரே ஒரு உன்னத நோக்குடன் இம் மின்னணுச் சஞ்சிகை மலர்வதும், அப்படியான நன்மக்களின் வருகைக்காக வழிமேல் விழி வைத்துக் காத்திருப்பதுமே எம் ஆதி மார்க்க னீதி அவை.

இவ் ஆதி மார்க்க னீதி மொழியானது, சுய லாபம், வீண் பெருமை, பொழுது போக்கு என்ற இழி செயலுக்கெலாம் அப்பாற் தாண்டி, மங்காப் புதுமை சிந்தும் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் திருவடிப் பெருமையை எடுத்து அறிக்கை செய்வதனையே அடி நாதமாகக் கொண்டு மலர்ந்து வருகிறது. மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய மூல மந்திரம், பாத பூஜை, மகா சங்கல்ப மந்திரம் - இவற்றை செயலாகக் கொண்ட ஆதி மார்க்க னீதி அவையின் மெய் அடியார்கள் சூழ்ந்து வெளியாக்கிய இந்நன்னூலினைப் பார்த்துப் படித்துப் பலன் பெற எண்ணும் நன்மக்கள் யாவரும் நற்கதி பெற வேண்டிப் பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்களின் பொற்பாதம் போற்றி வணங்கி வாழ்த்துகிறேன்.

நமஸ்காரம்.

சாலை ரவி

நிறுவனர், ஆதி மார்க்க னீதி அவை

Copyright © AMNA Trust, Chennai

ஆதி மார்க்க னீதி அவையின் செப்டம்பர் மாத மின்னணு சஞ்சிகை

இதழ் எண் : 63, அவை நிகழ்வு : 11, இசை வகுப்பு : 3

ஆதி மார்க்க னீதி அவையின் தேவ அங்கங்கள் தொகுத்து வெளியாக்கிய செப்டம்பர் மாத நிகழ்வுகளின் இரத்தினச் சுருக்கம் –

04-09-2026: ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி சிறப்பு : ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கோவர்த்தன கிரியைத் தன் சுண்டு விரல் கொண்டு குடையாகத் தாங்கி மக்களைக் காத்ததும், காளிங்க நர்த்தனம் புரிந்து கடும் விஷத்தை முறித்து உயிர்களை மீட்டதும், கம்சன் ஏவிய பூதகி எனும் அரக்கியை அசுரவதம் செய்து உலகை ரட்சித்ததும், ஆகிய மூன்று அதிசயத்தின் சிறப்பைக் கொண்டாடும் திருநாளே ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி.

06-09-2026: சர்வ மதங்களின் அடிநாதமாகிய மறலி கை தீண்டாமையின் மெய்ச் செயலை அறிந்தவரே சமரச சுத்த சன்மார்க்க மரபினர்.

10-09-2026: அந்தர்முகப் பார்வையாகிய அகக் கண்ணனை அறிந்து ஆத்ம விசாரணை செய்வதே மெய்வழி.

12-09-2026: தவத்திருமேனியரின் திரு ஆலவாயில் இருந்து பொழியும் அமுதமே கங்கை நதிச் செங்கையாகும்.

13-09-2026: விநாயகர் சதுர்த்தி சிறப்பு : "உ" எனும் பிள்ளையார் சுழியிட்டு விநாயகரை முன்னிறுத்தி நாம் சுப காரியங்கள் செய்வதால் அவரே முந்தி வந்த துந்தி எனப் பெறுகிறார். பிள்ளையார் சுழி என்பது ஆதிப் புள்ளியில் இருந்து விரிந்த பிரணவத்தின் ரகசியமாகவும், அவரின் வேழமுகம் குருவின் திரு உருவைக் குறிப்பதுமாக உள்ளது.

17-09-2026: இருதயத்தைத் திறந்து இறை பொருளைக் காட்ட வல்ல குருவாகிய அனுமனின் நாத மருந்தே ராம லக்ஷ்மணரின் அறியாமை மயக்கத்தைப் போக்கி உயிர்த்தெழ வைத்த சஞ்ஞீவியாகும்.

19-09-2026: கைபேசி விழிப்புணர்வு - நவீன தொழில் நுட்பத்தின் மூலம் விரைவான பணம், அதிக வட்டி, பணத்தை இரட்டிப்பாக்கும் பேராசைகளில் சிக்காமல் விழிப்புணர்வுடன் வாழ்வதே மெய் உணர்வு பெற்றதன் பயனாகும்.

20-09-2026: ஜனக மகாராஜாவிற்கு அஷ்டவக்ரர் அருளிய உபதேங்கள் யாவும் ஆதி மார்க்க னீதி அவையில் செயல் நிரூபணையாக நடைபெற்று வருகிறது.

24-09-2026: எழுதிய எழுத்தாக இருந்த பஞ்சாட்சரத்தை எழுதாத எழுத்தெனும் பூரணப் பொருளாக நம்மிடம் கைவரவாக்கித் தருபவர்களே பரிசு குரு.

26-09-2026: 'சு' எனும் மந்திரத்தில் வாசம் செய்வது சுவாசம். அது நாளுக்கு நாள் உள்ளடங்கி ஓடுவதைக் கற்கும் கல்வியே சாகாக்கல்வி.

27-09-2026: 108 உபநிஷத்துக்களில் ஒன்றான மாண்டூக்ய உபநிஷத்தில் ஐந்து அவத்தைகளின் ஆன்ம நிலையும், ஓம் எனும் பிரணவ மந்திரத்தின் இரகசியமும் பொதிந்துள்ளது.

06-09-2026 / 20-09-2026 / 27-09-2026 (இசை வகுப்பு): பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய தெய்வத் திருப்பாடல்களை சஹானா மற்றும் மோகனம் ராகத்தில் தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்றது.

Copyright © AMNA Trust, Chennai

எமபயத்தைக் கடத்தாட்டி வைக்கின்ற ஒரு அனாத ரக்ஷகரைத் தேடிக்கொள்வதற்கு மனிதர்களின் னினைவை எச்சரித்துத் தூண்டவே ஒவ்வொரு மதமும் வந்நது.

எமது வார்த்தையைக் கேட்ட மாத்திரத்தில் உனது எண்ணத்தைவிட்டு னீ படாரென்று திரும்பவேண்டும். அப்படியில்லாமல் தாமசமாகத் திரும்பினால் தண்டனையே வரும். அதோடு எம்மை அவமானப்படுத்தின ஆக்கினையும் வரும். ரக்ஷிக்க வந்ந அதே ஆயுதம் பக்ஷிக்கவும் வந்து னின்றுகொள்ளும். ஆனால், னாம் சொன்ன மாத்திரத்தில் படாரென்று திரும்பினால் எம்முடைய பிரீதி உன் ஜீவன்மேல் வந்து மோதும். உன் ஜீவனுக்கு அது ஒரு போர்வையாக இருக்கும். இப்படியே பல போர்வைகளை னீ போர்த்திக் கொண்டாயானால், வரும் அமளி ஆபத்து, உனது தேகத்தை வந்து தீண்டாது.

~ சாலை ஆண்டவர்கள்

Copyright © AMNA Trust, Chennai

ஆதி மார்க்க னீதி அவையின் 2026 செப்டம்பர் மாதம் அவை நிகழ்வுகள் – 2026 அக்டோபர் மாதம் வெளியீடு

04-09-2026 ~ வெள்ளிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி சிறப்பு
தொகுப்பு: ஸ்ரீமதி. ஜீவிதா வடிவேலன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **கண்ணகன் ஆலம் ஆழ்த்தும் களிப்புறும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்:

ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா கோவர்த்தன கிரியைத் தன் சுண்டு விரல் கொண்டு குடையாகத் தாங்கி மக்களைக் காத்ததும், காளிங்க நர்த்தனம் புரிந்து கடும் விஷத்தை முறித்து உயிர்களை மீட்டதும், கம்சன் ஏவிய பூதகி எனும் அரக்கியை அசுரவதம் செய்து உலகை ரட்சித்ததும், ஆகிய மூன்று அதிசயத்தின் சிறப்பைக் கொண்டாடும் திருநாளே ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி. உறியில் திரண்ட வெண்ணை கவர்ந்து ருசித்து உண்ணும் பால கிருஷ்ணனின் லீலையானது, காரண தேகத்துள் காவியேறும் மெய்ச் செயலை உணர்த்தும் தேவ ரகசியமாகும். நவநீத கிருஷ்ணராக வரும் குருபிரான் அருளால் அநீதமாகிய நம் நவக்கிரக அதிகாரம் நிக்கிரகமாகி நவநீதமாக மாறுகிறது.

திருமெய்ஞ்ஞானக் கொரல்: திருவாக்கியம் எண் 16ன் தொடர்ச்சி: அறுபத்தேழு சாதிகளடங்கிய பல்லாயிரக்கணக்கான ஆண் பெண் இருபாலரும் எம் மக்களாகத் திரண்டு இருப்பினும் னம் பாடு நிற்கவில்லையே. இன்னமும் தொடர்ந்து ஒவ்வொரு தலையையும் இந்த மெய்யில் திருப்ப பாடு பட்டு வருகிறோமே!

ஜீவசகோதரர் சங்கர்: குருகுல வாசம் பயின்று அரும்பாடு பட்டு பெற்ற மெய்ஞ்ஞானத்தை உலக மக்களுக்கு அருள்பவரே ஆண்குரு. எவ்வுயிரும் தன்னுயிர் போல் எண்ணி இரங்கும் பேரிரக்கம், பெருங்கருணை என்ற தெய்வீக குணங்களைத் தன்னகத்தே கொண்ட தவசிரேஷ்டரே ஒருருளைத் தேவ ரதத்தை நடத்தும் தேவாதி தேவர். கோடி மனுவுக்கு ஈந்தாலும் குறையாத சிமிழியின் மையைத் தன்னகத்தே கொண்ட தெய்வ ஆசானின் திருவடியில் சரண் புகுவதே சாகாவரம் பெறும் சன்மார்க்க வழி.

ஜீவசகோதரி பானுமதி (ஆவடி) : **திருக்குரான் - அல் அன் கபூத் : 41 : 44**
அல்லாஹ் சத்தியத்தைக் கொண்டே வானங்களையும் பூமியையும் படைத்திருக்கிறான். பொன்னுடலை அறியாமல் மண்ணாகிய அழி தேகத்தின் மீது ஆசையுள்ளோர் யாவரும் பெண்களே. தேகம் கடந்து நிற்கும் மெய்ப் பொருளை அறிந்து அடைந்த ஆண்குருவின் தயவு ஒன்றே நம் மூவாசையை வேரறுத்து முத்தி வீட்டில் சேர்க்கும்.

ஜீவசகோதரர் வடிவேலன்: பாலகிருஷ்ணரின் பாதம் பதித்து, அமுது படைத்து வழிபடும் சிறப்பான திருநாளே கோகுலாஷ்டமி. ஜீவ ரத்ன செழும் புனல் ஆசனத்தில் தேவர் உத்தமர் புடைசூழ கோவர்த்தனக் குடையுள் அமர்ந்து யுகங்கள் நான்கும் கைக் கொண்டு வரும் கோடூழியரே கண்ணபிரான். அவரின் திருக் கரத்திலிருந்து அருளப் பெறும் பிரசாதத்தை உண்டோரே புண்ணியர். பதினெட்டு அத்தியாயம் உள்ள பகவத் கீதையை நமது மெய் அனுபவமாக ஆக்கி அருளும் கீதாசரியர் வீற்றிருக்கும் திருஸ்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திர பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

Copyright © AMNA Trust, Chennai

06-09-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
தொகுப்பு: ஸ்ரீமதி. கவிதா வெங்கட்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **துறந்ந மனத் தனியோகர் உளத்திற் பூக்கும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

குருபிரான் அருளமுதம்:

மெய் பொய்யும் பிரித்துக் காட்டும் பொறுப்பிடத்தைத் தன்னுள் அறியாமல் இருப்பதே உச்சபட்ச அறியாமை. அடக்கம் என்பது உயிருடன் இருக்கையில் அறிந்து அடைவதாகும். அலைபாயும் மனதை ஒருமுகமாக்கி அறிவு வடிவாக மாற்றி வைப்பவரே மெய்ஆசான். சர்வ மதங்களின் அடிநாதமாகிய மறலி கை தீண்டாமையின் மெய்ச் செயலை அறிந்தவரே சமரச சுத்த சன்மார்க்க மரபினர்.

ஜீவசகோதரி *சரஸ்பதி கன்னியப்பன் (ஆவடி) :*

சமரச வேத நாதராக வரும் குருபிரானின் வாய்மையே, சமரசம் அற்ற இறை வழிபாட்டு சடங்கு சம்பிரதாய அறியாமையை அடியோடு களைகிறது. யுகந்தோறும் வரும் வேத கர்த்தர்களின் அருளாலும் பெருங் கருணையாலும், பிரம்ம வித்தையைப் பழகியே, சர்வத்திலும் நின்று ஆடும் குஞ்ஞித பாதத்தை, ஏழ் நிலைக் கம்பத்தில் ஊடுருவி நிற்கும் திருப்பாதத்தைத் தரிசித்து தேவப் பதம் அடைய முடியும்.

ஜீவசகோதரி *சரஸ்பதி மகேஷ் (ஆவடி) :*

மும்மூர்த்திகரம் ஒருங்கு திரண்ட குருநாதரின் நாதத் தொனியே நம் மும்மலத்தைக் கருக்கி முச்சுடரைப் பிரகாசிக்கச் செய்கிறது. முகத்துக் கண் கொண்டு காண்பது அனைத்தும் பொய்த் தோற்றமே. அகத்துக் கண் கொண்டே அசலான இறைவனைக் காண இயலும். குரு பெருமான் அருளும் மெய் வணக்கத்தை வைராக்கிய சித்தமுடன் பழகி வந்தால் காலன் அணுக முடியாத எல்லையில் குடியேறிக் களிப்புடன் வாழலாம்.

ஜீவசகோதரி *லஷ்மி (பம்மல்) :*

அறியாமை எனும் இருளுக்குள் தான் அறிவு வெளிச்சம் உள்ளது. தன்னறிவில் சாய்ந்து மனவழியில் செய்கின்ற செயல்கள் யாவும் பிறவிச் சுழலில் சிக்க வைக்கும். பேரறிவாகிய ஆசான் வழிகாட்டுதல் படி வாழ்ந்தால் பிறவாமை எனும் பெரும் பதம் கிட்டும். தன்னை அறிந்த பெரியோர்களின் அன்பே நம்மைச் சிவமாக்கும்.

ஜீவசகோதரி அலமேலு (சிதம்பரம்):

சப்த சப்தாதிய சாயலைக் கொண்டே இறைவன் மனுவைப் படைத்துள்ளான். அனித்திய ஆக்கைக் குடிலாகிய இந்தத் தேகமே பொய். நித்திய தேகமாகிய இருதயமாம் கல்பு என்பதே மெய் என ஆசான் அருளால் அறிவதே ஞானத்தின் முதற்படி. மூல மந்திரத்தை அறிவுக் கண் கொண்டு தரிசிக்கச் செய்து அழியாப் பதியில் நம்மை வாழ வைக்கும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

ஜீவசகோதரி மோகனா (திண்டிவனம்):

மனமெனும் மாய வலையிலிருந்து விடுபட்டு வாழ்வதே மெய் வாழ்வு. குருபிரானின் கருணையால் மெய்ப் பொருள் அறிந்து மெய்ப் பயன் பெற்று மெய்யறிவின் மூலம் இறைவனுடன் இரண்டறக் கலந்து வாழ்வதே வாழ்வு. நம் சித்தத்தில் தூய ஞானச் சுடர் விளக்கேற்றி, ஆறாவது அறிவைப் பிரகாசிக்க வைக்கும் வல்லபம் உள்ளவரே குரு வள்ளல்.

ஜீவசகோதரர் முருகன் (சின்னாளப்பட்டி):

உலகில் ஞானவேடம் தரித்து தவறான வழிகாட்டும் போலி குருக்களால் அனேகம் மக்கள் தங்கள் உடலாலும் உள்ளத்தாலும் பல இன்னலுக்கு ஆளாகி அவதிப் படுகின்றனர்.

Copyright © AMNA Trust, Chennai

அறிவை அணுவளவும் அறியாத மூடர்களின் போதனையில் சிக்கியவர்கள் யாவரும் தோசித் தலைகளே. மெய்யான குரு பிரானின் கையகத்தில் ஆகிய அதிர்ஷ்ட மக்களுக்கு, அவர்களின் உள்ளமே பெருங் கோயில், ஊனுடம்பே ஆலயம். அணுக் கோடியிலும் நிறைந்த ஆதியனை அறிய வைக்கும் தெய்வீகத் திருத்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவானது.

10-09-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
தொகுப்பு: ஸ்ரீமதி. முத்துலட்சுமி ஸ்ரீனிவாசன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **மழைதனைக் காட்டு மின்னல் மறைந்து பின் தோன்றி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்:

மெய்வழி ஆண்டவர்களின் சிவானுபவமே வேதாந்தம். பரமாத்ம சொரூபரான ஆசானே கோவர்த்தனக் குடைக் கொடைக் கொண்டல். ஐந்து எழுத்தில் ஓரெழுத்தான எழுதாத எழுத்தே முப்பொருள் கோலமாகும். ஐம்புல நுகர்வின் அனுபவம் ஒருவருக்கு ஒருவர் வேறுபடுவது எண்ணத்தின் மூலமே. குருவின் சொல்லுக்கு இசைந்து உணர்வு மனம் நினைவு இதனைத் தன் கைவசம் ஆக்கியவனே ஞானம் பெற்ற ஆண்மகன். மனதை அலைவற்று நிலைக்கச் செய்வதே பிரம்மவித்தை. இறந்தபின் உள்ள வாழ்க்கையைக் குறிக்கும் சடங்கே பித்ருக்களுக்கான திதியாகும். சர்வத்தையும் உள்ளடக்கிய சைவத் திருமேனியான அனாதியில் உள்ள முதன்மையான மந்திரமே சுக்கிலாம் பரதரம். அரியானை அறிய வைத்து அந்தணனாக நம்மைப் பிரட்டிப் பிறப்பித்தவரே பிராமணன்.

திருமெய்ஞ்ஞானக் கொரல்: திருவாக்கியம் எண் 16ன் தொடர்ச்சி: சர்வத்தையும் உள்ளடக்கிய திருமேனி உன்னைப் புகழும்படி செய்வதே புகழுடம்பை எய்தும் வழி. மதியைச் சார்ந்து நின்றால் மயிரைப் போட்டு மலையை இழுக்கும் அரிதான காரியம் சாத்தியமே.

குருபிரான் அருளமுதம்: காமீல்களின் கைம்முறையான மெய்யை அவர்கள் அருளும் போதே சிவமயமாக ஆகிறோம். எமனாகிய சினத்தைக் காப்பதே தன்னைக் காக்கும் செயல். அந்தர் முகப் பார்வையாகிய அகக் கண்ணனை அறிந்து ஆத்ம விசாரணை செய்வதே மெய்வழி. அறிவின் வழி நிற்பவருக்கே போன நாள் மீண்டு வரும். எதற்கும் முதல் பொருளான அழிவிலா அப் பொருளை உன்னில் அறிய வைப்பதுவே எம் ஆதி மார்க்க நீதி அவை. சிற்றணு வடிவான ஆதியே துணையே தோற்றமில்லா அரூப வடிவம். அதன் நிலைகள் 13ஐயும் அறிவதுவே தன்னை அறியும் தவமுறை ரகசியம். வேதத்தின் செயலுள்ள வாசகம் நம் அனுபவமாகி அதனைப் பிறரிடம் சிந்தித்துப் பேசுவது உயர்ந்த தவமாகும். ஆசானின் உயிர்க் களிப்பு வாய்மையால் எழுதாத எழுத்தெனும் அக்கண் யாவருக்கும் துலங்கி வர பரிசுத்த ஆவித் தெய்வத்தின் திருவடியே துணையாகும்.

ஜீவசகோதரர் சங்கர்: மெய் மெய்யாகும் செயல் உள்ள அவையே ஆதி மார்க்க னீதி அவை. வைராக்கியம், கவனம், சலியாத ஆர்வ சித்தம் உள்ளவரே மெய்ஞ்ஞானத்தில் நிலைப்பர். மதி வடிவாக வரும் ஆசானின் தயவால் நம் விதியை மாற்றி நித்திய வாழ்விற்கு உரிய மக்களாக ஆகுவதே நம் கடமையாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிறைவானது .

Copyright © AMNA Trust, Chennai

12-09-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
தொகுப்பு: ஸ்ரீமதி. ஹேமலதா தியாகராஜன்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **பூரண னான புதியவன் றூதென்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்:

மானிடச் சட்டை தாங்கி வந்த நாம் இறப்பை நோக்கிய பயணத்தில் வெகு வேகமாகச் சென்றுக் கொண்டிருக்கிறோம். சாவு சவக்குழியில் விழ இருந்த நம்மை மீட்டெடுத்து மறுபிறப்பு அளித்து மரணமிலாப் பெருவாழ்வு அளிப்பவரே அருட்குரு. நம் கடத்துக்குள் மூன்றாவது கண்ணாகப் பிரகாசிக்கும் இறை பொருளுடன் இரண்டறக் கலந்து நரை, திரை, மூப்பு, சாக்காடு அணுகா காலாதீத எல்லையில் குடியேறி வாழ்வதே மெய்வாழ்வு. பிண்டம் புகுந்து இனிப் பிறவா நிலையை அடைவதே சன்மார்க்கச் செயலாகும்.

கோடாயிதக்கூர் திருவாக்கியம் : 245 உபதேசத்திற்கு முன் னீங்ஙள் படித்திருந்த உங்ஙள் படிப்பை மெச்சிக் கொண்டிருந்தீர்கள்; அதுவே போதும் என்று திருப்தியோடும் இருந்தீர்கள்; உபதேசம் வாங்ஙியதும் அது எவ்வளவு மட்டமானதாகப் பிரயோஜனம் அற்றதாகப் போயிற்று.

ஜீவசகோதரர் கௌதம் : தவத் திருமேனியரின் திரு ஆலவாயில் இருந்து பொழியும் அமுதமே கங்கை நதிச் செங்கையாகும். பரிசு குருவாய் வந்து விஸ்வரூபம் காட்டி, நம் சூக்கும தேகத்துள் சுக வடிவாய் நின்றிலங்கும் இறைவனைத் தரிசிக்கச் செய்கிறார்கள். எமன் எல்லையில் ஏட்டுக்கல்வி உதவாது என்பதை உணர்த்தி, அசலான சாகாக் கல்வியைப் பயிற்றுவிக்கும் எல்லையே குருகுலம். அலைபாயும் மனதைச் செம்மையாக்கி நற்துணையாய் மாற்றி வைக்கும் செயலே பிரம்ம வித்தை. ஆசான் அருளால் அழி தேகத்துள் பொதிந்திருக்கும் பொன்னுடலைக் கண்டவர்கள் பரமபத வீடடைந்து பரமசுகத்தை அடைவது சத்தியமே.

ஜீவசகோதரர் சங்கர்: ஆறறிவு பெற்றும் ஐயறிவு நுகர்ச்சியில் உழண்டு கிடக்கும் நரனை, ஆவிடை எனும் தேவ யோனியில் மறு பிறப்பு அளித்து மனுவாய் மாற்றி வைக்கிறார்கள். ஜென்ம சாபல்யம் எனும் ஜீவ ரட்சிப்புச் செயலை உலக மக்களுக்கு அளக்க வேண்டி எல்லாக் காலங்களிலும் தீர்க்கதரிசியர்கள் திரு அவதாரம் தாங்கி இந்நிலவுலகிற்கு வந்து கொண்டே இருக்கிறார்கள். பேரறிவின் கிரண வீச்சைப் பிரதிபலிக்கும் பாரவான்களின் திருவடி நிழலில் நித்தம் நாம் தஞ்சம் புகுவதே பரமபத நித்திய வாழ்வு அடைவதற்கான வழியாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

13-09-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
விநாயகர் சதுர்த்தி சிறப்பு அவை
தொகுப்பு: ஸ்ரீ. ஜெய்குமார்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்களின் திருவடி பணிந்து **கைத்தலநிறைகனி அப்பமொ டவல்பொரி...** எனும் விநாயகர் துதி பாடலுடன் அவை இனிதே உதயமானது.

குருபிரான் அருளமுதம்:

"உ" எனும் பிள்ளையார் சுழியிட்டு விநாயகரை முன்னிறுத்தி நாம் சுப காரியங்கள் செய்வதால் அவரே முந்தி வந்த துந்தி எனப் பெறுகிறார். விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு பல்வேறு பொருட்களைக் கொண்டு பலவித தோற்றத்தில் விநாயகர் உருவம் செய்து வழிபடுவது தமிழர்களின் மரபு. அவருக்காக படைக்க பெறும் உணவு வகைகளும் அவரின்

Copyright © AMNA Trust, Chennai

வடிவமும் அகம் சார்ந்த ஆன்மீகத் தத்துவ ரகசியமாகும். பிள்ளையார் சுழி என்பது ஆதி புள்ளியில் இருந்து விரிந்த பிரணவத்தின் ரகசியமாகவும். அவரின் வேழமுகம் குருவின் திரு உருவைக் குறிப்பதுமாக உள்ளது. சர்வ இறை வடிவங்களும் அதன் திருநாமங்களும் தத்துவ ரகசியங்களே ஆகும். குருவின் அருளால் மனதின் தன்மை அறிந்து அழி உடல் மீதும் அழி உலகின் மீதும் உள்ள இச்சை நீக்கி மரணத்தை வெல்வதே சன்மார்க்கம்.

ஜீவசகோதரர் வடிவேலன் : குருபிரானின் தத்துவ வடிவமே ஆண் பெண் தோற்றத்தில், திரு நாரையூரில் இருக்கும் பொல்லாப் பிள்ளையார். மரபுவழிக் கதைகளின் படி, நம்பியாண்டார் நம்பிக்கு அருள்புரிந்து, ராஜராஜ சோழனுக்குச் சிதம்பரத்தில் மறைந்திருந்த திருமுறைகளை அறிய வழிகாட்டியதால், இவர் திருமுறை காட்டிய பிள்ளையார் என்றும் போற்றப் பெறுகிறார். விநாயகரின் தும்பிக்கை எனும் நான்ற வாய் ஆசானின் ஆலவாய் அதிசயமும், விநாயகரின் வாகனமான மூஞ்சுறு, மெய்ப்பொருள் இரகசியமும் உணர்த்தக் கூடிய தெய்வீக அடையாளமாக உள்ளன.

ஜீவசகோதரர் சங்கர் : கணபதி, பிள்ளையார், வக்கிரதுண்ட விநாயகர், கஜமுகன், ஐங்கரன் எனப் பல திருநாமங்களில் போற்றப்படும் விநாயகப் பெருமானே பஞ்ச பூதங்களுக்கும் கணத் தலை அரசனாக விளங்குகிறார். மூலாதார விநாயகரின் தத்துவ உண்மையை உணர்வதற்கு, இறைவனை வெளிப்புற வழிபாட்டில் மட்டும் தேடாமல், தன்னுள் உணரும் மெய்யறிவைப் பெற வேண்டும். தோற்றம், நிற்றல், மறைவு ஆகிய மூன்று காலங்களுக்கும் அப்பாற்பட்டு நிற்கும் இறைநிலையை ஆசான் அருளால் உணர்வதே ஆன்மீகத்தின் நோக்கமாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

17-09-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
தொகுப்பு: ஸ்ரீமதி. கல்பனா விஜயகுமார்

பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **சொல்லரிய னால்வேதம் அங்ஙம் ஆறும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை மலர்ந்தது .

ஜீவசகோதரர் சங்கர்:

தியானத்திற்கு மூலம் குருவின் திருவுருவம். சர்வத்தையும் சுருட்டித் திரட்டி தனது இடத்து அடக்கியுள்ள எழுதாத எழுத்தே சொல்லரிய வேதமாகும். அவரவருள் ஆவிப் பொருளாக விளங்கும் நான்கு தேக ரகசியத்தை உணர்த்துவதே நால் வேதங்கள். அழியாத அகமிய தேகத்துள் குடியேறி தன்னையறிந்து வாழ்தலே மனுவின் கடமையாகும்.

குருபிரான் அருளும் சன்மார்க்கச் செயல் மூலம் அழிந்திடா சூக்குமத்துள் அடங்கிப் பார்ப்பதே அடக்கம். வந்த வேதமான ஆசானின் அருளமுதை உட்கொண்டு ஓதாமல் ஓதும் வேதமறிந்து அதனுடன் இரண்டறக் கலந்து பிறவிப் பிணி தீர்ப்பதே மெய்ப் பயன் ஆகும். ஜடத்துக்கு ஆதாரமான மனம் கொண்டே சூக்கும, காரண, மகா காரண தேகத்தின் ரகசியத்தை அறிய முடியும். ஜீவன் அவாவுடன் தாவும்போது மனமாகி ஆறங்கம் எனும் ஆறு ஆதாரமாகிறது. இருதயத்தைத் திறந்து இறை பொருளைக் காட்ட வல்ல குருவாகிய அனுமனின் நாத மருந்தே ராம லக்ஷ்மணரின் அறியாமை மயக்கத்தைப் போக்கி உயிர்த்தெழ வைத்த சஞ்ஜீவியாகும். செம்பொருளான ஆசானின் நாதமே, நம் அகந்தைக் கிழங்கை வேரறுத்து சுகந்தம் பதிக்கிறது. மேட்டிமையால் அகந்தை, கர்வம் கொண்டு தன்னறிவில் சாய்ந்து குருநிந்தை செய்பவர்கள் யாவரும் இடி சுவருள் அடைந்து மகிழும் கழுதைக்கு ஒப்பானவர்களே. பெருமாள் வாமன அவதாரத்தில் மகாபலிச் சக்கரவர்த்தியிடம் மூன்றடி நிலம் யாசித்துத் தன் பாதமெனும் வாசக் கமலத்தை அவர் தலைமேல் வைத்து ஆட்கொண்டு மோட்சம் அளித்த செயலே ஓணம் பண்டிகை. நபுசான அரக்க குணம் விலக்கித் துடைக்கப் பெற்று சிபத்தான நற்குணத்தில் ஆக்கப் பெற்றவர்க்கே மெய் வாய்க்கும். புராணக் கதைகள்

Copyright © AMNA Trust, Chennai

உணர்த்தும் அகமியச் செயலை அறிந்து பலன் பெறும் அருகதை மெய் அறிந்தவர்க்கே வாய்க்கும்.

திருமெய்ஞ்ஞானக் கொரல் - திருவாக்கியம் எண் 17 சங்ஙாரம் என்பது அரக்கி அரக்கரை விலக்கித் துலக்கி அமரராக்கும் அரும் பெருங் கருணைச் செயலாகும்.

ஜீவசகோதரர் விஜயகுமார்: அசலை நினைவூட்ட பெரியோர்கள் எடுத்து வைத்த நகல் சடங்குகளையே பிரதானமாக எண்ணிச் செய்பவன் வாழ்நாளை வீணாக்குகிறான். தன்னிச்சையாகச் செயல்படும் புலன் மூலம் செய்யும் பூஜையை விட்டு அறிவின் மூலம் செய்யும் பூஜையே பலன் தரும். குருவின் திருவருளே நம் வாழ்நாள் வீணாகாமல் புண்ணியத்தில் ஆக்குகிறது. காலக்கிரகத்தின் பிடியிலிருந்து மீட்டு கங்குல் பகலற்ற காலமற்ற எல்லையில் குடியேற்றும் பிரம்ம வித்தைச் செயலே ஓணம். வேத இதிகாச புராணங்கள் உணர்த்தும் மெய்ப் பலனை அனுபவத்தால் அறிய வைக்கும் அவையே ஆதி மார்க்க னீதி அவை .

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது .

19-09-2026 ~ சனிக்கிழமை அவை ~ காஞ்சிபுரம்
தொகுப்பு: ஸ்ரீ. கிருஷ்ணமூர்த்தி

பரிசுத்த ஆவித் தெய்வம் பரம்பொருள் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அப்பன் என்னுடை அன்னை தேசிகன்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே உதயமானது.

ஜீவசகோதரர் கௌதம்:

நம் மூன்றாவது கண் கொண்டு மெய்யுணர்வின் மூலம் காணும் சுயம் பிரகாச மெய்ப் பொருளே அறிவாகும். படைப்புக் கர்த்தாவாகிய பிரம்மத்தைத் தன்னுள் அறிந்தவர்களின் மெய் அனுபவ வெளிப்பாடே வாய்மையாகும். சீடனின் இருதயத்தைத் திறந்து காட்டி, மறைந்துள்ள மாமணி ஜோதியாகிய இறைவனைத் தரிசிக்கச் செய்து சிவபதம் அளிப்பவரே சிவகுரு. உடல், உயிர், ஆன்மா எனும் முப்பொருளை அறிவித்து, ஜீவன் அலையாமல் பாதுகாக்கும் அறச் செயலைப் பழக்கி வைப்பதே புண்ணியர்களின் நோக்கமாகும்.

எமபடரடிபடு கோடாயிதக்கூர் திருவாக்கியம் எண் 246 : உபதேசத்திற்கு முன்னே உங்கள் மனதை முன்னும், அறிவைப் பின்னுமாக வைத்திருந்தீர்கள். உபதேசத்திற்குப் பின் அறிவை முன்னும் அந்த அறிவின் வழி உங்கள் மனதையும் னடக்க விடுங்கள். இந்த முறையில் னடப்பது தான் மெய்வழி.

ஜீவசகோதரர் விஜயகுமார் : குருபிரான் தம் இறை கஜானாவிலிருந்து அருளும் பேரருள் நிறைந்த திருவாசகமே நம்மை மெய்ஞ்ஞானத்தில் வேரூன்றி நிலைக்கச் செய்கிறது. அறிவு எனும் வஸ்து தன்னிலிருந்து வியாபித்து பிரதி பிம்பமாக எதிரொலிப்பதன் மூலமே நாம் சர்வத்தையும் காண்கிறோம் கேட்கிறோம் அறிகிறோம். ஆசான் உபதேசத்தைக் கேட்டு அதன் படி நடப்பதே மகா பலசாலியான எமனை வெல்வதற்கான ஒரே உபாயமாகும்.

ஜீவசகோதரர் கோபிநாத் : **கைபேசி விழிப்புணர்வு** நவீன தொழில் நுட்பத்தின் மூலம் விரைவான பண லாபம், அதிக வட்டி, பணத்தை இரட்டிப்பாக்கும் ஆசை போன்றவற்றில் சிக்காமல், முதலீட்டிற்கு முன் முழுமையாக ஆராய்ந்து செயல்பட வேண்டும். அறியப்படாத புதிய செயலிகள், கிரிப்டோ கரன்சியின் (இணைய வழி பணம்) முதலீட்டுத் திட்டங்களை நம்பாமல், அவற்றின் நம்பகத் தன்மை மற்றும் அபாயத்தை அறிந்து செயல்பட வேண்டும். நம்

Copyright © AMNA Trust, Chennai

தனிப்பட்ட தகவல்கள் மற்றும் பணத் தரவுகளைப் பாதுகாப்பது ஒவ்வொருவரின் பொறுப்பாகும். பேராசையைத் தவிர்த்து வாழ்வதே மெய் உணர்வு பெற்றதன் பயனாகும்.

ஜீவசகோதரர் விஜயகுமார் :

பரிசுத்த வேதாகமம் - கொரிந்தியர் அதிகாரம் : 4 திருவசனம் 6 :10

இறை நிலையைத் தன்னுள் உணர்ந்த பெரியோர்கள் பேரிரக்கம் கொண்டு வேத வேதாந்தங்களை அருளிச் செய்து, மனிதனுக்கு மெய்ஞ்ஞானத்தை வழங்குகிறார்கள். வேத ஏட்டில் இருக்கும் மந்திரங்களை நம் கூட்டினுள் அனுபவமாகப் பெறுவதன் மூலமே மெய்ப்பலன் கிட்டும். அமலாண்மிக ஐஸ்வரியத்தை உணர்ந்து அறிவின் பாதையில் செல்லும் போது நம் மனமே தடையாக நிற்கும். குரு அருளின் மூலமே அத்தடைகளைத் தகர்த்தெறிந்து முத்தி வீடடைய முடியும். நாம் கற்பனையாக எண்ணும் இறை உருவத்தை விட்டு மெய் ஆசானின் நாதத்தால் ஆறாவது அறிவை அறிந்து அடைவதே நிஜமான இறை உணர்வாகும்.

ஜீவசகோதரர் சங்கர்: மெய்யறிவு பெற்று பிரம்ம வித்தைச் செயலை நித்தம் பழகித் தேர்வதே மெய்ப் பயணமாகும். மும்மலங்கள் கடந்து, ஜீவாத்மா பரமாத்மாவுடன் இணையும் மெய்ச் செயலை உணர்த்தும் அடையாளமே சின்முத்திரை. மனுத் தலைக்குள் அகரம், உகரம், மகரம் மூன்றும் ஓம் எனும் பிரணவத்தின் சூட்சுமமாக இருப்பதை வேத சாட்சிகளுடன் செயலாக்கும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

20-09-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
தொகுப்பு: ஸ்ரீ. தியாகராஜன்

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய **பற்றிய பற்றாய்ப் பரந்நுல கெங்நும்...** எனும் தெய்வத் திருப்பாடலுடன் அவை இனிதே மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம் :

காலத்தின் ரகசியத்தை தன்னுள் அறிவதே ஞானம். திருச்சிற்றம்பலப் பொருளைக் குறித்தே சர்வ வேதங்களும் பறை சாற்றுகிறது. ஆதி மெய் உதய பூரண வேதாந்தம் என்பது பஞ்ஞாட்சரப் பொருளை உணர்த்தும் திரு நாமங்களாகும். நம் மனதை ஓர் நிலையாக்கி செய்யப் பெறும் அனைத்து வேலைகளும் மிகவும் நேர்த்தியாகவும் சிறப்பாகவும் அமையும்.

ஜீவசகோதரர் மோகன்: பிரம்மனிஷ்டரின் பெருங்கருணையே மனிதனுக்கு அறிவு மாணிக்கத்தை அளித்து, பூவுலகில் இருந்து விண்ணுலகை ஆளும் வழியை அருள்கிறது. பெரியோர்களின் திருனோக்கு தரிசனமே நம் ஜீவனைக் கடைத்தேற்றுகிறது. ஆசான் முன்னிலையில் நம் மனம் சஞ்சலமற்று அறிவு வடிவாகிறது என்பதற்கு மெய் அனுபவமே சாட்சியாகும்.

ஜீவசகோதரர் சசிகுமார் : உலகின் சர்வ படைப்புகளுக்கும் காரணம் பிரம்மம் என்பதை தன்னில் அறிவதுவே தன்னையறிதல். ஆசானின் நாதமே பரிசுத்த ஆவியாக நம் செவிக்குள் நுழைந்து அறிவுப் பிரகாசத்தை ஒளிரச் செய்கிறது. ஜனக மகராஜாவிற்கு அஷ்டவக்ரர் அருளிய உபதேசங்கள் யாவும் ஆதி மார்க்க னீதி அவையில் செயல் னிரூபணையாக நடைபெற்று வருகிறது.

ஜீவசகோதரர் கேசவன் : **அகர முதல் அவ் எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு** எனும் திருக்கொரலின் மெய்ப் பொருளை ஆறாவது அறிவு பெற்ற மக்களே அறிவர். அகரப் பொருளாகிய ஜீவனைக் கண்டு தரிசிக்கும் செயலே ஜென்ம சாபல்யம். நற்றாளாகிய திருவடியைத் தன்னில் அறிந்து கற்பதுவே மெய்க் கல்வியின் பயன். வாலறிவனான

Copyright © AMNA Trust, Chennai

குருநாதரின் தயவால் சாகாக்கலை பழகித் தேர்வதன் மூலம் நற்றாளைத் தொழுது நற்கதி அடையலாம்.

ஜீவசகோதரர் புகழ்: செவிச்செல்வத்தின் மூலமே அறிவுச் செல்வத்தைப் பெற முடியும். மெய்க் குருபிரான் தன் திருவாய் மொழியால் அருளும் அருளமுத வர்ஷிப்பே ஜீவனைக் காக்கும் மெய்யான கல்வியாகும். கடத்துக்குள் இருக்கும் கடவுளை காட்டி பிறவிப் பெருங் கடலைக் கடக்கும் உபாயம் அருள்பவரே உத்தம புருஷர்.

ஜீவசகோதரி மணிமொழி: அறம் பொருள் இன்பத்தின் வழியாக அடைவதே னித்திய வீடு. அசைந்து கொண்டே இருக்கும் நம் மனதை அசையா நிலையில் ஆக்கி மகிழ்ச்சி வாழ்வு வரத்தில் ஏற்றும் செயலே அறம். வாக்மி நாதரின் வாய்மையின் மூலம் நம் அஞ்ஞானக் கிழங்கு வேரறுக்கப் பெற்று வரமான சொர்க்கபதி வாழ்வு கை வசமாகிறது.

ஜீவசகோதரர் ராஜேந்திரன் (காஞ்சிபுரம்): வேதத்தைப் படிப்பதன் பயன் இறைவனைக் காண்பதே. மனிதன் அடைய வேண்டிய மெய்வழிப் பாதையை விளக்கி காட்டுவதே வேதம். மனுத் தலைக்குள் ஆவியாய் நின்றிலங்கும் அரும்பளிங்கு ஈசனை அறிவுக்கண் கொண்டே தரிசிக்க முடியும். மெய் ஆசானின் அன்பே நம்மை சிவமாக்கும். எழுத்தறிவித்த இறைவனை எழுதாத எழுத்தின் மூலம் அறிய வைக்கும் அருந்தலமே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

24-09-2026 ~ வியாழக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
தொகுப்பு: ஸ்ரீமதி. விஜயசித்ரா

பரிசுத்த ஆவித் தெய்வம் பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஆறிரு சமயத்திற்கும் அறிவுரை தெய்வமாகி...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை உதயமானது.

குருபிரான் அருளமுதம்:

அவரவரின் தன்னகத்துள் விளங்கும் சுயம்பிரகாசப் பொருளை வைராக்கியமுடன் தேடி அடைந்து பலன் பெறும் பொருட்டு வார வாரமும் ஆரவாரமாக நடைபெறுவதே ஆதி மார்க்க னீதி அவை. சிறப்பெலாம் திரண்டேறும் சிந்தையில் நம்பினவர் குடி திருவங்கேறும் வாழ்வான வாழுங் கலையை வாழும் காலத்திலேயே ஆறாவது அறிவின் மூலம் அறிந்தால் தூல முத்தியோடு ஜீவ முக்தியும் கிடைப்பது திண்ணம். அறியாமை எனும் ஜாதி மத இருட் பிடிப்பிலிருந்து கழட்டி தெய்வீக நிலையில் நம்மை ஏற்றவே பிரளயம் அடக்கம் எனப் பயில்காட்டி ஆண்டவர்கள் அழைத்தார்கள். அறிவை அறிந்த மக்களே பெரியோர்களின் வாய்மையை முழுமையாக அறிவர். இக பர வாழ்வில் தெளிவை அறிந்தவர்க்கே நல்ல தீர்வு கிட்டும்.

திரு மெய்ஞ்ஞானக்கொரல் வாக்கியம் எண் 17ன் தொடர்ச்சி: பெரியோர்களின் நிலையை இயற்கைக்கு மாற்றமாகப் பொய்யாகச் சித்தரிப்பது அறியாமையே. அரக்கர் அரக்கி விலக்கித் துலக்கி அனந்தர்களாக ஆக்கும் அசுர சம்ஹாரமே ஓணம் பண்டிகையின் தாத்பரியம். சடங்குகள் ஏற்படுத்தும் விழிப்புணர்வை அகமியத்தில் அறிவுள்ள மக்களே அறிவர்.

ஜீவசகோதரர் கௌதம்: பரிசாக வரும் குருவின் சொல்லக விளக்காகிய ஜோதியே நம் மும்மலங்களைக் கருக்கி முச்சுடர் விளங்கச் செய்கிறது. எழுத்தாக இருந்த பஞ்சாட்சரத்தை எழுதாத எழுத்தெனும் பூரணப் பொருளாக நம்மிடம் கைவரவாக்கித் தருபவர்களே பரிசு குரு.

Copyright © AMNA Trust, Chennai

ஜீவசகோதரர் விஜயகுமார்: சாரதியான பரமாத்மாவின் திருக்கரத்தில் இருப்பதே நம் உடலாகிய தேரினை இழுக்கும் குதிரைகளின் கடிவாளம். அது இறைவனின் சன்னத முத்திரை தாங்கி வரும் பெரியோர்களின் ஓசை கொண்ட திரு நடனம் ஆகும். தாயுமிலி தந்தையுமிலி எனும் ஒரு முகத் துணிவுடன் வரும் பாரவான்களின் செம்மை சேர் முகப்பினுள் வழி கூடி நடப்பவர் யாவரும் எமன் எல்லையில் வெற்றி பெறுவது நிச்சயம்.

ஜீவசகோதரர் சங்கர்: அறுமுகத்துடன் பன்னிரு கரம் தாங்கி அசுரத் தன்மையுடன் விரிந்த அவரவரின் மனமே அரக்கன். அதுவே ஆசான் அருளால் அறிவு வடிவாகி ஒரு முகமாகி ஐம்புலக் கதவும் அடை படும் பொழுதே பேரின்பத்தை எட்ட முடியும். அகர முதல்வனாக வரும் குருபெருமான் தன் நாதமாகிய உயிரைக் கொடுத்தே நம் முதலாக விளங்கும் அகரத்தை அறியச் செய்கிறார்கள். வயது வாழ்நாளான கற்பக வாசி நம் கைவசமாக குருபிரான் அருள் வேண்டும். நீதி வழுவா நெறி முறையில் அவரவரின் உள்ளத்துள் சரணாகதி அடைவதே நற்கதி அடைவதற்கான வழியாகும்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை இனிதே நிறைவானது.

26-09-2026 ~ சனிக்கிழமை அவை ~ நாயகன் இல்லம்
தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

பிரம்மோதய மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **அண்டமும் அதி பாதாளம் அகிலமோடமரர் மற்றும்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே மலர்ந்தது.

குருபிரான் அருளமுதம்:

தேகத்தின் அதிபதியாகிய ஸ்ரீமன் நாராயண மூர்த்தியின் திருச்சன்னிதி நிழல் போய்ச் சேரவே, நாம் இம் மானிடச் சட்டை எடுத்தோம். எவ் வழி நல்வழி என்பது வேதாகமம் அவ்வழி எனக்கருள் அருட்பெருஞ்ஜோதி என வள்ளல் பிரான் அருளிய அவ்வழியை ஒரு மெய்க் குருபிரான் தயவால்தான் பெற முடியும். தன் சாயலில் நம்மைப் படைத்த இறைவனை வேத சாட்சியாக அறிய வைப்பவரே அருட்குரு. அறியாமை உறக்கமாகவும் அறிவுத் தெளிவுடன் வாழ்வது விழிப்பு உலகாகவும் இருப்பதைக் குறிப்பதே உறங்குவது போல் சாக்காடு உறங்கி விழிப்பது போல் பிறப்பு எனும் திருக்குறள் ஆகும்.

கோடாயிதக்கூர் - வாக்கியம் எண்: 247 தவம் நிஷ்டை யோகம் மூன்றும் ஒரு பொருட் சொற்களே. தேவத் தீர்ப்பு வசனங்களுக்கு நாம் செவி மடுப்பதும் நமது எந்த ஒரு செயலும் மெய்க் குருவின் நினைவுக்கு நேராக இருப்பதும் சுவாசம் மூக்களவே ஓடுவதும் தவமாகும். "சு" எனும் மந்திரத்தில் வாசம் செய்வது சுவாசம். அது நாளுக்கு நாள் உள்ளடங்கி ஓடுவதைக் கற்கும் கல்வியே சாகாக்கல்வி என சாலை ஆண்டவர்கள் அருளியுள்ளார்கள்.

ஜீவசகோதரர் சங்கர்: இயேசு பிரான் அருளிய சத்தியமும் வழியும் ஜீவனுமாக இருக்கின்ற நான் எனும் ஆன்மப் பொருளை அறிதலே தன்னை அறிதல். நம் நாமத்திற்குரிய பொருளான உயிராகிய இறைவனை அறிவதற்காகத் தரப்பெற்றதே மனிதப் பிறப்பு. ஆசான் அருளால் ஆறாம் அறிவை அறிவதன் மூலம் பரலோக ராஜ்ஜியத்தையும் மனிதனின் சுத்தத்துறை இருதயத்தில் இருக்கும் இறைவனையும் அறியலாம். யுகாந்த நாட்டுச் செல்வமாகிய பரிசுத்த ஆவியின் மூலம் நரனை மனுவாக்கி தேவனாக்கி மோன நிலையில் ஆக்கி மெய்ப் பலன் அருளும் எல்லையே ஆதி மார்க்க னீதி அவை.

பரிசுத்த ஆவித் தெய்வம் அருளிய ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவானது.

Copyright © AMNA Trust, Chennai

27-09-2026 ~ ஞாயிற்றுக்கிழமை அவை ~ சிவகாசி
தொகுப்பு: ஸ்ரீ. விஜயகுமார்

வித்து நாயகம் பிரம்மப் பிரகாச மெய்வழி சாலை ஆண்டவர்கள் அருளிய **ஓதுமறை வேதனெறி உண்மையாய் ஒழுகிவளர்...** எனும் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே உதயமானது.

குருபிரான் அருளமுதம்:

மனம் தளும்பி நிதம் அலையாமல் பாதுகாக்கும் செயலே அறம். தவ வணக்கத்தில் சத்தியப் பிடியாக இருப்பவர்கள் புண்ணியத்தின் அடையாளத்தை அறிவர். புலன் ஐந்தையும் வெல்வதே வீரம் என்பதை தன்னுள் செயலாக அறிவதே தவ விரதர்களுக்கான தன்மையாக இருக்கும். வேத முடியாகிய முப்பொருள் மெய்ம்மையை அறிந்தடைவதே ஜென்ம சாபல்யம்.

ஜீவசகோதரர் வெங்கட் : மெய் வணக்கம் ஒன்றே நம் மனதை செம்மையாக்கும். குருபிரானிடத்தில் சரணாகதி அடைந்தால் இறைவனின் கஜானாவில் இருக்கும் அறிவுச் செல்வத்தை அள்ளிப் பருகலாம். ஒழுக்க சீலர்களாக வாழ்ந்து மெய் வணக்கம் பழகி வருவதன் மூலமே வினையிலிருந்து தப்பித்து பிறவாமை பெற முடியும்.

ஜீவசகோதரி கவிதா வெங்கட் : வினையின் காரணமாக எடுத்த தேகமானது புலன்களின் தலைவனான மனதின் செயலால் கீழ்நோக்கமாகவே இருக்கின்றது . நாற்றமுள்ள சிப்பிக்குள்ளே ஓர் முத்தை விளையச் செய்வது போல நம் மனதினுள் ஒளி தோன்றச் செய்வது ஆசானின் நாதமே. மனம் எனும் குதிரையின் கடிவாளம் குருபிரான் திருக்கரத்தில் உள்ளது. ஆசானுக்கும் சீடனுக்குமான தொப்புள் கொடி உறவானது, துப்புரவாகத் தன்னுள் துலக்கும் ஆசானாக நின்று நம்மை வழி நடத்துகின்றது.

ஜீவசகோதரர் மஞ்சுநாதன்: ஜீவனே திருச்சிற்றம்பலப் பொருளாக மனுத்தலைக்குள் பிரகாசிக்கிறது. நம் நாமத்திற்கான அழியாத பொருளின் மீது நாம் வைக்கும் அன்பே தன்னை அறியச் செய்து சிவமாக்கும். வித்தக விநாயகராக வருகின்ற குருபிரானே வினை தீர்க்கும் வல்லபம் கொண்டவர்.

ஜீவசகோதரர் அஜய் கிருஷ்ணன்: 108 உபநிடதங்களில் ஒன்றான மாண்டூக்ய உபநிஷத் அதர்வண வேதத்தில் அமைந்துள்ளது. கௌடபாதர் இதற்கு 215 செய்யுளில் உரை எழுதியுள்ளார். ஜாக்ரம் சொப்பனம் சுழுத்தி துரியம் துரியாதீதம் என்ற ஐந்து அவத்தைகளை ஆன்ம நிலைகளாக விவரிக்கிறார்கள். ஓம் என்ற எழுத்தினை நான்கு பகுதியாகப் பிரித்து, ஒலி கொண்ட மூன்றாக அ, உ, ம எனவும், ஒலியற்றதாக துரிய நிலையும் சொல்லப் பெற்றுள்ளது.

ஜீவசகோதரி அஞ்ஞனா: ஆலயங்களில் ஸ்தாபிக்கப் பெற்றிருக்கும் சிலா வடிவமான இறை மூர்த்தங்கள் அனைத்தும் மனித தோற்றத்தின் நகல் அடையாளத்தைக் குறிக்கிறது. தோற்றமுடைய பொருளுக்குத் திசை உண்டு. ஆனால் திசையற்றதே தோற்றமில்லாமை எனும் ஆவிப் பொருள். கோவரத்னக் குடையைச் சுண்டு விரலால் தாங்கி நிற்கும் மெய் ஆசானே பூர்வ புராதனப் பொது நடத்தரசராக வந்து நம்மைப் பரமபத வாழ்வில் குடியேற்றி வைக்கிறார்கள்.

ஜீவசகோதரர் சுதர்சன் : அறியாமை எனும் இருளை விலக்கி அருளொளி ஏற்றுபவரே குரு. ஆறாவது அறிவு இன்னதென உணர்த்தி, நவக்கிரகங்களை வேத சாட்சியாக நம்மிடம் தொட்டுக் காட்டுபவரே மெய் ஆசான். வேதங்களில் உள்ள தேவ ரகசியங்கள் அனைத்தையும் மெய் அனுபவமாகப் பெறும் இடமே ஆதி மார்க்க னீதி அவை.

ஜீவசகோதரர் குபேர் : உலகின் சர்வ செல்வ சம்பத்தும் நாம் பெற்றிருந்தாலும் குருவின் பாத தாமரைகளில் பணியாவிட்டால் பலன் தராது என ஆதிசங்கரர் அருள்கிறார். பழம் புராதனம்

Copyright © AMNA Trust, Chennai

அருளும் பெரியோர்கள் கைலாயப் பரம்பரையாய் வாழையடி வாழையாக இப்பூவுலகிற்கு அவதரித்து வருகிறார்கள். குருவும் கோவிந்தனும் ஒன்றாகவே இருக்கிறார்கள் என்பதை ஆறாவது அறிவின் மூலம் மெய் அனுபவம் பெற்ற மக்களே அறிவர்.

பரிசுத்த ஆவித் தெய்வத்தின் ஸ்தோத்திரப் பாடலுடன் அவை நிகழ்வுகள் இனிதே நிறைவானது.

இசை வகுப்பு
தொகுப்பு: ஸ்ரீமதி. லாவண்யா வாசுதேவன்

06-09-2026 / 20-09-2026 / 27-09-2026 - ஆகிய தேதிகளில் நடைபெற்ற இசை வகுப்பின் தொகுப்பு:

பிரம்மப் பிரகாச சாலை ஆண்டவர்கள் அருளிய ஆதி மெய் உதய பூரண வேதாந்தத்தில் உள்ள ஸ்தோத்திரப் பாடல்களுடன் அவைகள் மலர்ந்தன. குருபிரான் அருளிய படி, சாலை ஆண்டவர்கள் அருளிய தெய்வத் திருப்பாடல்கள் சஹானா ராகத்திலும் **தரைதனில் னரராய்த் தோன்றி...** எனும் தெய்வத் தேடு கூடகம் பாடல் மோகன ராகத்திலும், விருத்தமாகவும், திருஞானத் தாழிசைப் பாடலான **செத்திடமும் பிறந்திடமும் இனிச் சாகாதிருந்திடமும்...** என்ற பாடலும், ராக தாளத்துடன் பாடுவதற்கான பயிற்சி வழங்கப் பெற்று அவைகள் இனிதே நிறைவானது.

குரு வா ஆழ்க! குருவே துணை!

Copyright © AMNA Trust, Chennai

ஆதி மார்க்க னீதி அவையின் வருங்கால நிகழ்வுகள்

நாள்/ இடம்	னிகழ்வுகள்
16-11-2026 / சென்னை திங்கள்கிழமை	குருபிரான் திருமுன்பாக **ஜீவதம்பதியர் ஜெய்குமார் - பவித்ரா** இவர்களின் மகள் **இந்துஜா - அஜய்குமார்** அவர்களின் திருமணம் சென்னையில் நடைபெற உள்ளது.
22-11-2026 / காஞ்சிபுரம் ஞாயிற்றுக்கிழமை	குருபிரான் திருமுன்பாக **ஜீவதம்பதியர் கௌதம் - ஜெயலஷ்மி** இவர்களின் **புதுமனை புகுவிழா** காஞ்சிபுரத்தில் நடைபெற உள்ளது.
27-11-2026 / மதுரை வெள்ளிக்கிழமை	அழகர்மலை அடிவாரத்தில் அமைந்துள்ள அருள்மிகு கள்ளழகர் திருக்கோவிலுக்கு குருபிரான் அவர்கள் விஜயம் செய்ய உள்ளார்கள்.
29-11-2026 / சிவகாசி ஞாயிற்றுக்கிழமை	குருபிரான் திருமுன்பாக **மெய்வழி குழந்தைசாமி கவுண்டர் ஐயா அவர்களின் அவதாரத் திருநாள் விழா** சிவகாசியில் நடைபெற உள்ளது.

Copyright © AMNA Trust, Chennai

குருபிரான் தங்களின் திரு நோக்கினின்றும் நோக்கிய பிரகாரம் ஆதி மார்க்க னீதி அவையின், 2026 செப்டம்பர் மாதம் குருபாதம் போற்றி நல்லுணர்வுடன் நல்லுள்ளம் கொண்டு நன்கொடை வழங்கிய நன்மக்களின் எண்ணிக்கை - 54

அனைவருக்கும் நன்றி !!!

AMNA அறக்கட்டளைக்கு நன்கொடை வழங்ங ஆர்வம் உள்ளவர்கள், கீழ்கண்ட வங்கிக் கணக்கில் அனுப்புமாறு அன்புடன் கேட்டுக் கொள்கிறோம்.

Account Name: Aathi Margha Neethi Avai
Account Number: 50200047470073
IFSC: HDFC0000323
Branch: Mylapore

Copyright © AMNA Trust, Chennai

All Rights Reserved

Published by:
AMNA TRUST (Registration No. 163/2019)
13/2, Hyder Garden 2nd Street, Otteri,
Chennai – 600012

www.amnatrust.org

Contact Us:

Email: write2amnatrust@gmail.com

YouTube Channel: https://youtube.com/c/amnatrust/

Facebook Page: https://www.facebook.com/amnatrust/

***பின்குறிப்பு**: இம்மின்னணுச்சஞ்ஞிகையில் தவிர்க்க இயலாது வரும் சில தட்டச்சுப் பிழைகளை அங்கத்தினர்கள் பொறுத்து அதனைத் தங்கள் பிரதிகளில் திருத்தி படித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். பிழைகளைத் தவிர்ப்பதற்கான முயற்சியை வெளியீட்டு குழு தொடர்ந்து மேற்கொள்ளும்.*

The Editorial Team:
Shri. Sankar, Sivakasi
Shri. Vijayakumar, Sivakasi
Shri. Venkatesa Muthu, Chennai
Shri. Vadivelan, Chennai
Shri. Manimaran, Chennai
Shri. Thiyagarajan, Chennai
Shri. Chiranjeevi, Chennai

Issue 63 – Month: October 2026